# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 203 | திங்கள் Monday | 19.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode


# சென்னையில் கனமழை: அமைச்சர்களுக்கு முதலமைச்சர் விஜய் அதிரடி உத்தரவு



சென்னையில் பெய்துவரும் கனமழை தொடர்பாக அமைச்சர்களுக்கு முதல்-அமைச்சர் விஜய் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வட தமிழக பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு கடலோர ஆந்திர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. கர்நாடக கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள மத்திய-கிழக்கு அரபிக்கடல் பகுதி க ளி லி ரு ந் து குமரிக்கடல் பகுதிகள் வரை, ஒரு காற்றழுத்த தாழ்வுபாதைநிலவுகிறது. லட்சத்தீவின் வடக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. லட்சத்தீவின் வடக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியிலிருந்து தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் வரை, கேரளா மற்றும் தமிழக பகுதிகள் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வுபாதைநிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

சென்னையில் கனமழை

இதனிடையே, சென்னையில் நேற்று மாலை முதல் கனமழை பெய்தது. இரவு விடிய விடிய கனமழை பெய்த நிலையில் நகரின் பல பகுதிகளில் மழைநீர் சூழ்ந்தது. மழைநீரை அகற்றும் பணியில் மாநகராட்சி அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

முதல்-அமைச்சர் விஜய் உத்தரவு

சென்னையில் கனமழை பெய்த நிலையில் அமைச்சர்களுக்கு முதல்-அமைச்சர் விஜய் அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளார். சென்னையில் 15 மண்டலங்களுக்கான பொறுப்பு அமைச்சர்களாக 8 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த பொறுப்பு அமைச்சர்கள் உடனடியாக சென்னைதிரும்பமுதல்-அமைச்சர்விஜய் உத்தரவிட்டுள்ளார். மேலும், சென்னையில் மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் மீட்பு பணிகளை விரைவுபடுத்த அமைச்சர்களுக்கு முதல்-அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சூழலில், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (TNSDMA) பொதுமக்களுக்கு எஸ்.ஓ.எஸ். (SOS) மூலம் எச்சரிக்கை விடுத்தது. இதனை தொடர்ந்து, செல்போன்களில் எச்சரிக்கைக்கான அலறல் சத்தமும் கேட்டது.

அதில், சென்னையில் இன்று அதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கவும். அதிகாரப்பூர்வ வானிலை அறிவிப்புகள் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை பின்பற்றவும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால், பொதுமக்கள் முன்பே வேண்டிய பொருட்களை வாங்கி வைத்து கொள்ளவும், தேவையின்றி வெளியே செல்லவேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

மீட்புக்குழுக்கள்

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரக்கோணத்தில் இருந்து, தேசிய பேரிடர் மீட்புப்படையின் 3 மீட்புக்குழுக்கள் சென்னைக்கு இன்று அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. இதன்படி, தேசிய பேரிடர் மீட்புப்படை (என்.டி.ஆர்.எப்.) சென்னைக்கு விரைந்துள்ளது. ஒவ்வொருமீட்புக்குழுவிலும் தலா 30 வீரர்கள் என மொத்தம் 90 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.


தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

சார்பாக




அனைவருக்கும்

ஆயுத பூஜை நல்வாழ்த்துக்கள்


# “இந்திய கல்விமுறை எல்லோருக்குமானது அல்ல” ராகுல் காந்தி விமர்சனம்




புதுடெல்லி:

"இந்தியகல்விமுறை என்பது அனைவரையும் உள்ளடக்கியது அல்ல. லட்சக்கணக்கான மாணவர்களை வெளியே வைத்திருக்க வடிவமைக்கப்பட்டது." என்று ராகுல் க ா ந் தி விமர்சித்துள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, மாணவர்கள் சிலருடன் கலந்துரையாடிய வீடியோ இன்ஸ்டாகிராமில் பதிவேற்றப்பட்டுள்ளது.

அதில், "நாட்டில் நிலவும் கல்வி முறை நம்பிக்கை தரக்கூடியது அல்ல. இது அனைவரையும் உள்ளடக்கியதும் அல்ல.

உங்களிடம் பணம், அதிகாரம் இல்லையென்றால் அல்லது ஆங்கிலம் பேசத்தெரியாவிட்டால், சிஸ்டம் உங்களை இரண்டாவது சிந்தனை இன்றி வெளியே தள்ளும். இதை நீங்கள் கல்விமுறை என்று அழைக்க முடியாது. இது ஒரு விலக்கு முறை.

லட்சக்கணக்கான இளைஞர்களை வெளியே வைத்திருக்க வடிவமைக்கப்பட்டுள்ளது." என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் குரல் நிகழ்ச்சி மூலம் ராகுல் காந்தி மாணவர்களைச் சந்தித்து வருகிறார். கோட்டா, டேராடூன், பிரயாக்ராஜ், புனே, இந்தூர் நகரங்களில் மாணவர்களின் குரல் நிகழ்ச்சியை நடத்திய ராகுல் காந்தி சமீபத்தில் சென்னையில் அந்நிகழ்ச்சியை நடத்தினார்.

மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், அவர்கள் விரும்பும் தீர்வுகள் குறித்து இந்த நிகழ்ச்சி பேசுகிறது. இத்தகைய நிகழ்ச்சிகள் மூலம் மாணவச் சமுதாயத்தின் குரலை தேசிய அளவில் ஒலிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை ராகுல் காந்தி எடுத்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.


செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# கட்டணமில்லா தரிசனத்துக்கு பணம் வசூலித்தால் கடும் நடவடிக்கை; அமைச்சர் ரமேஷ் எச்சரிக்கை



கோவில்களில் பக்தர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா தரிசனத்துக்கு பணம் வசூலிப்பதை அனுமதிக்க முடியாது என்றும், இதுபோன்ற புகார்கள் உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் ரமேஷ் தெரிவித்துள்ளார். இது குறித்து அமைச்சர் ரமேஷ் பேசியதாவது:-

ஆட்சி அமைந்து தற்போது 3 மாதங்களே நிறைவடைந்துள்ளன. கோவில் நிர்வாகங்கள் மற்றும் பக்தர்களின் நலன் சார்ந்த அனைத்து மாற்றங்களையும் ஒரே நாளில் கொண்டுவந்துவிட முடியாது. ஒவ்வொரு நடவடிக்கையையும் முறையாக ஆய்வு செய்து, தேவையான மாற்றங்களை படிப்படியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கோவில்களுக்குவரும் பக்தர்கள் சிரமமின்றி தரிசனம் செய்வதற்கான சூழலை உருவாக்குவது அவசியம். அதேநேரத்தில், கோயில் நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கும் பக்தர்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். கோவில்களில் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்துவது, தரிசனவரிசைகளை ஒழுங்குபடுத்துவது, பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது உள்ளிட்ட பணிகளில் கோவில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, கோயிலுக்கு வரும் பக்தர்கள் ஊழியர்களுடன் ஒத்துழைத்து, அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

கட்டணமில்லா தரிசனத்துக்கு பணம் வசூலிப்பது போன்ற முறைகேடுகள் நடைபெறாமல் கண்காணிப்பது அவசியமாகும். பக்தர்கள் இதுபோன்ற புகார்களை எதிர்கொண்டால், சம்பந்தப்பட்ட கோவில் நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லலாம்.

கோவில்களில் பக்தர்களின் நலனுக்கு முன்னுரிமை அளித்து, தரிசன நடைமுறைகளைச் சீரமைப்பதுடன், முறைகேடுகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பேசியுள்ளார்.

# தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகத்தின், மாநில தலைமை செயற்குழு கூட்டம் கோவை குனியமுத்தூர் பகுதியில் நடைபெற்றது

## பேராசிரியர் ஜவாஹிருல்லா தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்



கோவை குனியமுத்தூர் பகுதியில் உள்ள தனியார் அரங்கில் இன்று,தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகத்தின், மாநில தலைமை செயற்குழு கூட்டம் நடைபெற்றது. பேராசிரியர் ஜவாஹிருல்லா தலைமையில் நடைபெற்ற இந்த, செயற்குழு கூட்டத்தில், கலந்து கொள்ள, தமிழகத்தை சேர்ந்த பல்வேறு, மாவட்டங்களில் இருந்து நிர்வாகிகளும், மாநில நிர்வாகிகளும், கலந்து கொண்டனர்.

இரண்டு நாட்கள் நடைபெற உள்ள இந்த கூட்டத்தில், நாளைய தினம்மாநிலபொது குழு கூட்டமாக, கோவை ஈச்சனாரி பகுதியில் உள்ள, தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. என்று தெரிவிக்க பட்டது. இதிலும் தமிழகத்தில் இருந்து 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட நபர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும், தெரிவித்துள்ளனர் இன்று நடைபெற்ற கூட்டத்தில் மாநில தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா, மாநில பொதுச் செயலாளர் அப்துல் சமத், மாநில பொதுச் செயலாளர் ஹாஜகனி, மாநில பொருளாளர் உமர், சபியுல்லா, மாநில செயலாளர் சாகுல் ஹமீது, நிர்வாகிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்த க்கது.




தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் வெற்றிப்பயணம் திட்டத்தின் கீழ் தேனி சின்னமனூர்வழித்தடம்,போடிநாயக்கனூர்உத்தமபாளையம்வழித்தடம்(2),கம்பம்தேவாரம்,கம்பம்காமயகவுண்டன்பட்டி வழித்தடம், சின்னமனூர் அண்ணா நகர் வழித்தடம் என மொத்தம் 6 புதிய பேருந்துகளை மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் .சி.டி.ஆர்.நிர்மல்குமார் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.சி.டி.ஆர்.நிர்மல்குமார் அவர்கள்,நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சபரி ஐங்கரன் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

# "சிற்றாறு" நதியைப் பாதுகாக்க வீதலீடர்ஸ் இயக்கத்தின் சார்பில், நகர்மன்ற தலைவரிடம் கோரிக்கை மனு!"



தென்காசி நகரப்பகுதியில் உள்ள கழிவுநீர் ஓடைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் முறையாகச் சுத்திகரிக்கப்படாமல் சிற்றாறு நதியிலும், புலியூர் பாசனக் கால்வாயிலும் கலப்பதைத்தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி,

தென்காசி நகர்மன்ற தலைவர் சாதி ரிடம்

வீத லீடர்ஸ் இயக்கத்தின் சார்பில்தன்னார்வலர் முத்துசெல்வம் கோரிக்கை மனு அளித்தார். அந்த கோரிக்கை மனுவில்;- தென்காசி நகரப்பகுதியில் கழிவுநீர் கலப்பதால் நதிநீர் மாசுபடுவதுடன், நீர்நிலைகளைச் சார்ந்துள்ள விவசாய நிலங்களும்பொதுமக்களும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. எனவே, கழிவுநீரை முறையாகச் சுத்திகரித்த பின்னரே நீர்நிலைகளில் வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் வலியுறுத்தப்பட்டு ள்ளது. மேலும், நகரின் முக்கிய இடங்கள், மக்கள் அதிகம் கூடும்பகுதிகள் மற்றும் சந்தைப் பகுதிகளில் போதிய அளவில் பெரிய குப்பைத் தொட்டிகளை அமைத்து, குப்பைகளை முறையாகச் சேகரித்து அகற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மாணவர்களின் ஆங்கில மொழித்திறன், படைப்பாற்றல், தன்னம்பிக்கை மற்றும் தகவல் தொடர்புத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில்

# கோவை பீளமேடு பகுதியில் உள்ள பிஎஸ்ஜி மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஆங்கில மன்றம் துவக்கவிழா நடைபெற்றது!



கோவை பீளமேடு பகுதியில் பிஎஸ்ஜி மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஆங்கிலமன்றத்தொடக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். மாணவர்களின் ஆங்கில மொழித்திறன், படைப்பாற்றல், தன்னம்பிக்கை மற்றும் தகவல் தொடர்புத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில், பல்வேறு சுவாரஸ்யமான செயல்பாடுகளுடன் இவ்விழா நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக முரளிதரனும், பிஎஸ்ஜி பள்ளிகளின் செயலாளர் நந்தகோபாலன்,பிஎஸ்ஜி மெட்ரிகுலேஷன் பள்ளியின் முதல்வர் காயத்ரி ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி இம்மன்றத்தை துவக்கி வைத்தனர் மேலும், பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் திரளாக இந்த விழாவில் பங்கேற்றனர்.

தொடர்ந்து இறைவணக்கப் பாடலுடன், குத்துவிளக்கேற்றி விழா துவங்கியது..

அதனைத் தொடர்ந்து, வரவேற்புரை நிகழ்த்தப்பட்டு, சிறப்பு விருந்தினர் அறிமுகம் செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார் மாணவர்களிடையே ஆங்கில மொழியின் மீது ஆர்வத்தையும் பற்றையும் ஏற்படுத்தும் முக்கிய முயற்சியாக ஆங்கில மன்றம் துவங்கபட்டது.

விழாவில் உரையாற்றிய சிறப்பு விருந்தினர், முரளிதரன் கூறியதாவது.. மாணவர்களின் கல்வி,வளர்ச்சிக்கும் தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும் மொழித்திறன், சிறந்த தகவல் தொடர்புத் திறன் மற்றும் தன்னம்பிக்கை ஆகியவை மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தினார்.

இவ்விழாவில் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கலை மற்றும் மொழிசார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

அதில்கவிதைவெளிப்பாடு, கருப்பொருள் சார்ந்த ஆடை அலங்காரம், நடனம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# கிருஷ்ணகிரி அணையில் 2,415 கனஅடி நீர் திறப்பு 3 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை



கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அணையில் இருந்து விநாடிக்கு 2,415 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், 3 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழையாலும், கெலவரப்பள்ளி அணையில் நீர்திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால், கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

அதன்படி,கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து இன்று (18-ம் தேதி) காலை 8 மணிக்கு விநாடிக்கு 1516 கனஅடியாக இருந்த நீர்வரத்து மதியம் 2 மணியளவில் 1679 கனஅடியாக அதிகரித்தது. அணையின் மொத்த கொள்ளளவான 52அடியில் நீர்மட்டம் 49.50 அடியாக உள்ளதால், நீர்வரத்து முழுவதும் 3 மணல் போக்கி சிறிய மதகுகள் வழியாகவிநாடிக்கு2415 கனஅடி திறக்கப்பட்டுள்ளது.

திறக்கப்பட்ட தண்ணீர் ஆற்றில் சீறி பாய்ந்து அணை பூங்காவிற்கு செல்லும் தரைப்பாலம் மூழ்கியபடி செல்கிறது. இதனால் கிருஷ்ணகிரி அணைக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டு ள்ளது.

இது குறித்து நீர்வளத்துறை அலுவலர்கள் கூறும்போது, கிருஷ்ணகிரி அணையில் இருந்து விநாடிக்கு 2415 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், தென்பெண்ணை ஆறு கடந்துசெல்லும்,பெரியமுத்தூர், திம்மாபுரம், சுண்டேகுப்பம், காவேரிப்பட்டிணம், கால்வேஹள்ளி, பெண்ணேஸ்வரமடம், சௌட்டஹள்ளி, தளிஅள்ளி உள்ளிட்ட 8 ஊராட்சிகளுக்கும்,

கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணை வரையில் 3 மாவட்டங்களில் கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், தென்பெண்ணை ஆற்றங்கரையோர பொதுமக்கள் ஆறு மற்றும் நீர்நிலைகளை கடக்கவோ, கால்நடைகளை ஆற்று பகுதிகளுக்கு கொண்டு செல்லவோ கூடாது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கெலவரப்பள்ளி அணை, கிருஷ்ணகிரி அணை, பாரூர் பெரிய ஏரி உள்ளிட்ட 6 இடங்களில் மணல் மூட்டைகள் தயார் நிலையிலும், கிருஷ்ணகிரி அணையில் மட்டும் 2 ஆயிரம் மணல் மூட்டைகள் தயார் நிலையிலும் வைக்கப்பட்டுள்ளது, என்றனர்.

# நந்தா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் சார்பில் உலக மூட்டுவலி தின விழா




நந்தா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் சார்பில் உலகமூட்டு தின விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

"சுகதி 2026" என்கிற கருப்பொருளின் அடிப்படையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி சண்முகன் அவர்கள் தலைமைத் தாங்கினார். இத்தினத்தினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன்குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

இதில் தமிழ்நாடு கைத்தறி, ஜவுளி மற்றும் காதித்துறை அமைச்சர் விஜய பாலாஜி சிறப்பு விருந்தினராகக் கலந்துக் கொண்டு சிறப்பித்தார். மேலும், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ்.திருமூர்த்தி மற்றும் நிர்வாக அலுவலர் முனைவர் ஜீ.தர்மராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். முன்னதாககல்லூரியின் முதல்வர் மருத்துவர் எம். கிருத்திகா அவர்கள் விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார்.

,விஜயபாலாஜி சிறப்புரையாற்றுகையில், ஐந்தாயிரம் வருட பழமையான ஆயுர்வேத மருத்துவத்தின் சிறப்புகளையும் மகத்துவத்தினையும் நகர்புறங்கள் மட்டுமல்லாமல் கிராமபுறங்களிலும் மேம்படுத்தவேண்டும் என்று ஆயுர்வேதம் பயிலும் மாணவர்களை வலியுறுத்தினார். பின்னர்,பல்வேறு வகையான மூட்டுவலி சம்பந்தமான ஆயுர்வேத அரங்குகள் மற்றும் மருந்தகங்கள் நிறைந்த அருங்காட்சியகத்தினை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பார்வையிட்டார்.

இத்தினத்தினை ஏற்பாடு செய்த மருத்துவர்கள்,மருத்துவ ஆசிரியர்கள், செவிலியர்கள் மற்றும் பயனடைந்த பயிற்சி மாணவர்களை கல்லூரி நிர்வாகத்தினர்கள் வெகுவாக பாராட்டி தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

## காவலர் வீர வணக்கநாளை முன்னிட்டு

# சங்கரன்கோவிலில் காவல்துறை பொதுமக்கள் நல்லுறவு விளையாட்டுபோட்டி கோலாகலமாக நடைபெற்றது



காவலர் வீரவணக்க நாளை (அக்டோபர் 21) முன்னிட்டு தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் சுற்றுவட்டார பகுதிகளில் காவல்துறைக்கும் பொது மக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் விதமாக பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப்போட்டி, கிரிக்கெட் மற்றும் வாலிபால் விளையாட்டு போட்டி காவல்துறையின் சார்பாக நடைபெற்றது.

வெற்றி பெற்ற அணிகளுக்கு *திருநெல்வேலி சரக காவல்துறை துணைத்தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு, இ.கா.ப., அவர்கள்* கோப்பைகள் வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார்.

காவல் பணியில் வீர மரணம் அடைந்த சார்பு ஆய்வாளர் தெய்வத்திரு. வெற்றிவேல் அவர்களது உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதைசெலுத்தி அவர்களது குடும்பத்தினருக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சியில் *தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.அசோக்குமார் அவர்கள்*, துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு. ரகுபதி ராஜா அவர்கள், காவல் ஆய்வாளர்கள், காவலர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



## மருக்காலங்குளம் ஊராட்சியில்

# ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடை திறப்பு விழா

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மருக்காலங்குளம் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றியப் பொது நிதி 2025–2026 திட்டத்தின் கீழ், ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடை திறப்பு விழா நடைபெற்றது.

மருக்காலங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் மருதநாச்சியார் வெள்ளத்துரை, தலைமையில் நடைபெற்றது

மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் முத்துலெட்சுமி அன்பழகன், முன்னிலை வகித்தார்நடைபெற்ற விழாவில்,

ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எம். திவ்யா மணிகண்டன்

தென்காசி சட்டமன்ற உறுப்பினர்டாக்டர்கலை கதிரவன் ஆகியோர் நிழற்குடையைத் திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்.

இதில் திமுக மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார்,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் மணிகண்டன்சீவலபுரம் காடியுடைப்பு முத்தம்மாள்புரம் பஞ்சாயத்து தலைவர் ஆர்பி முருகன், அரசு ஒப்பந்ததாரர் செக்கலிங்கபுரம் மாடசாமி மற்றும்பொதுமக்கள் கலந்து கொண்டனர்

விழா நிறைவில் ஊராட்சி செயலர் திருமலைச்சாமி நன்றியுரை வழங்கினார்.

# நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் பனை விதைகள் நடவு திருவிழா




நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் தமிழ்நாடு அரசின் பனை விதைகள் நடும் நெடும் பணியில், தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, தளிர்விடும் பாரதம் அறக்கட்டளை, தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பு, தமிழ்நாடு பசுமை இயக்கம்* ஆகியவை இணைந்து

கல்லங்காட்டுவலசு வாய்க்கால் கரையோர பகுதியில் பனை விதைகள் நடும் நெடும் பணி தொடங்கப்பட்டது. இதில் *2000க்கும் மேற்பட்ட பனை விதைகள் நடவு செய்யப்பட்டது.

நிகழ்விற்கு தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் தலைவரும், தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான சீனிவாசன் தலைமை தாங்கினார்.

தளிர்விடும் பாரதம்லோசகர் மோகன்ராஜ் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பு *மண்டல ஒருங்கிணைப்பாளர் ராஜசேகரன், நகராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை மலர்விழி* ஆகியோர் முன்னிலை வகித்தனர். தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் செயலாளர் பிரபு அவர்கள் பேசும் பொழுது, தமிழகம் முழுவதும் *பனை விதை நடும் பணி மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. தமிழகத்தின் அடையாளமான *பனை மரங்களை பாதுகாக்கும் நோக்கில்,* தளிர்விடும் பாரதம் அறக்கட்டளை இந்த முயற்சியை முன்னெடுத்துள்ளது.

இந்த சேவையை ஊக்குவிக்கும் விதமாக, அடுத்தடுத்த வாரங்களில் நடைபெறும் பனை விதை நடும் பணியில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் *'உதவி (Udhavi) செயலி (App)'* மூலம் பதிவு செய்து பனை விதைகள் நடவும் பொழுது *தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சார்பில் அவர்கள் பனை விதைகள் நடும் ஃபோட்டோ உடன் பாராட்டு சான்றிதழ்* வழங்கப்படும்.

பனை விதைகள் விதைப்பது சாதனைக்காக அல்ல,நம் சந்ததியினருக்காக... நம் மாநில மரத்தை நட அனைவரும் முன் வர வேண்டும். அனைவரும் பனை விதைகள் நடவு செய்து இயற்கையை காக்க உதவ வேண்டும் என பேசினார். நிகழ்வில் கல்வியாளர் முருகன், தன்னார்வலர்கள் ரவி, சித்ராபாபு,தேசிய பசுமை படை * பள்ளி மாணவ மாணவிகள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் தளிர்விடும் பாரதம் பொருளாளர் சின்னையா* நன்றி கூறினார்.

# 'ஞானேஷ் குமாரை யாராலும் காப்பாற்ற முடியாது' ஜெயராம் ரமேஷ் திட்டவட்டம்



புதுடெல்லி: வாக்காளர் பட்டியல்களை எளிதில் தேடக்கூடிய வடிவத்தில் அரசியல் கட்சிகளுக்கு வழங்கும் தேர்தல் ஆணையத்தின் முடிவுக்கு, வாக்குத் திருடர்களுக்கு எதிரான மக்கள் போராட்டங்களே காரணம் என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. ஆனால், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்றும், எஸ்ஐஆர் பணிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அக்கட்சிவலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் கட்சியின் ஜெயராம் ரமேஷ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும், காங்கிரஸ் கட்சியும் கடந்த இரண்டு ஆண்டுகளாக, வாக்காளர்பட்டியல்களை எளிதில் தேடக்கூடிய வடிவத்தில் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர்.

மத்தியப் பிரதேசத்தில் லட்சக்கணக்கான போலி வாக்காளர்களை காங்கிரஸ் கண்டறிந்தபோது, 2018–ல் தேடக்கூடிய வாக்காளர்பட்டியல்களை வழங்குவதை இந்தியத் தேர்தல் ஆணையம் நிறுத்தியது.வாக்குத்திருடர்களுக்கு வழிவகுப்பதற்காக இந்தக் கோரிக்கை 8 ஆண்டுகளாக மறுக்கப்பட்டது.

17 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மீண்டும்தொடங்கப்பட்ட சிறப்புச் சுருக்கத் திருத்தத்திற்காக (SSR), அரசியல் கட்சிகளுக்கு வாக்காளர் பட்டியல்கள் தேடக்கூடிய வடிவத்தில் வழங்கப்படும் என்று அக்டோபர் 15 அன்று தேர்தல் ஆணையம் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. வாக்குத் திருடர்களுக்கு எதிராக ஒட்டுமொத்த தேசமும் வீதிகளில் இறங்கியிருப்பதே இதற்குக் காரணம்.

ஒவ்வொரு முறையும் 'வாக்குத் திருடர்கள்' பிடிபடும்போது, மோடி அரசு, தேடக்கூடிய வாக்காளர் பட்டியல்களை நிறுத்துவது, போலி வாக்காளர்சேர்க்கைகள், எஸ்ஐஆர் போன்ற ஒரு புதிய தந்திரத்தைக் கையாள்கிறது. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரின் அறிவுறுத்தல்களின்படி செயல்பட்டு, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை தகர்த்தெறிந்த தலைமைத் தேர்தல் ஆணையரை யாராலும் காப்பாற்ற முடியாது. அவர் கட்டாயம் பதவி விலக வேண்டும்.

ஆனால் அது மட்டும் போதாது. இந்தியத் தேர்தல் ஆணையமும் அதன் தகவல் தொழில்நுட்ப அமைப்பும் முழுமையாகப் புதுப்பிக்கப்பட வேண்டும். 13 கோடிக்கும் அதிகமான இந்தியர்களின் வாக்குரிமையை ஆபத்தில் ஆழ்த்தியுள்ள எஸ்ஐஆர் பணிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

# மதுராந்தகம் தொகுதியில் வாக்காளர்களுக்கு த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் நன்றி தெரிவித்தார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தமிழக வெற்றி கழகம் சார்பில் மரகதம் குமரவேல் போட்டியிட்டு பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

மரகதம் குமரவேல் தனது தொகுதிக்கு உட்பட்ட மதுராந்தகம், சூரக்கோட்டை, காந்திநகர்,வன்னியர் தெரு, செங்குந்தர்பேட்டை, உள்ளிட்ட பல்வேறு பகுதியில் திறந்தவெளி வாகனத்தில் சென்று வாக்களித்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழகம் கட்சியினர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் மாவட்ட அளவிலான குத்துச்சண்டை போட்டி: மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்பு



ஈரோடு மாவட்ட கிங் பாக்சிங் அசோசியேஷன் சார்பில் மாவட்ட அளவிலான விறுவிறுப்பான குத்துச்சண்டை போட்டிகள் ஈரோடு செல்லாயம்மாள் திருமண மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றன.இளையதலைமுறையினரிடையே தற்காப்புக் கலை மற்றும் விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் நோக்கில் ஒருங்கிணைக்கப்பட்ட இப்போட்டியில், 9 வயது முதல் 22 வயதுக்குட்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த 100–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் உற்சாகத்துடன் களமிறங்கி தங்களது அபாரமான திறமைகளை வெளிப்படுத்தினர்.

இப்போட்டியினை லட்சிய ஜனநாயககட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் சத்தியமூர்த்தி, மாநில அமைப்புச் செயலாளர் பிரபு மற்றும் மாவட்டச் செயலாளர் இன்ஜினியர் அருள்குமார் ஆகியோர் முன்னின்று முறைப்படி தொடங்கி வைத்து வீரர்களை வாழ்த்தினர்.

இந்நிகழ்வில் அசோசியேஷனின் பொதுச்செயலாளர் யூசுப் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள், பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பல்வேறு பிரிவுகளின் கீழ் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டிகளின் முடிவில், வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்குப் பதக்கங்கள், வெற்றிக் கேடயங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், பங்கேற்ற அனைத்து வீரர்களுக்கும் ஊக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

# அதிமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி 2,000க்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்





தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தல்களில் அதிமுக உள்ளிட்ட கட்சிகளின் தோல்வியைத் தொடர்ந்து, திருக்கோவிலூர் அருகே தமிழக வெற்றிக் கழகத்தில் 2,000-க்கும் மேற்பட்டோர் இணைந்த நிகழ்வு நடைபெற்றது.

கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகச் செயலாளர் பரணி பாலாஜி தலைமையில், திருக்கோவிலூர் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திருக்கோவிலூர், ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த அதிமுக உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்து விலகிய 2,000-க்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

கட்சியில் புதிதாக இணைந்தவர்களுக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் கட்சித் துண்டுகளை அணிவித்து வரவேற்ற மாவட்டச் செயலாளர் பரணி பாலாஜி மற்றும் கட்சி நிர்வாகிகள், அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

மூன்று சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பல்வேறு கட்சியினர் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்துள்ள இந்நிகழ்வு, கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்டத்தில் கட்சியின் அமைப்பு ரீதியான வளர்ச்சியை முன்னெடுக்கும் நிகழ்வாக அமைந்துள்ளது.

# உலக மனநல விழிப்புணர்வு தினம்: புதுச்சேரியில் மாபெரும் கலை நிகழ்ச்சி!



புதுச்சேரி: உலக மனநல விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, அரிசுவடி மனநல மையம், ரோட்டரி சங்கம் மற்றும் சாய் அப்போலோ கல்வி நிறுவனங்கள் இணைந்து நடத்திய மாபெரும் கலைநிகழ்ச்சி மற்றும் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி, புதுச்சேரி கடற்கரைச் சாலையில் உள்ள காந்தி திடலில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்குப் புதுச்சேரி முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் என். ரங்கசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ராஜவேலு, சுற்றுலா மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மல்லாடி கிருஷ்ணராவ், ஓய்வுபெற்ற நீதிபதி திருமிகு சித்தார்த்தர் மற்றும் சாய் அப்போலோ கல்வி நிறுவனங்களின் நிறுவனர் டாக்டர் ஏ.ஆர். தங்கதுரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பேச்சுப் போட்டி, கோலப்போட்டி மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்ற மாணவ, மாணவிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ராஜவேலு அவர்கள் பரிசுகளை வழங்கி, அவர்களின் சாதனைகளைப் பாராட்டி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் சாய் அப்போலோ கல்வி நிறுவனங்களின் அனைத்து விரிவுரையாளர்கள், கல்லூரி முதல்வர்கள், முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி ஆனந்தஜோதி மற்றும் இணை இயக்குநர் திருமதி சுஷ்மிதா ஆகியோர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

மனநலத்தின் முக்கியத்துவத்தைப் பொதுமக்களிடையே எடுத்துரைப்பதோடு மாணவர்களின் கலை மற்றும் படைப்பாற்றல் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் இந்நிகழ்ச்சி அமைந்தது.

நிகழ்ச்சியின் நிறைவில், அரிசுவடி மனநல மையத்தின் நிறுவனர் திருமிகு இலவஜெகன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

# கொல்கத்தா துர்கா பூஜை பந்தல் விபத்து காயமடைந்தவர்களிடம் நலம் விசாரித்தார் அமித்ஷா



கொல்கத்தா: கொல்கத்தாவின் சோர்பகன் துர்கா பூஜை பந்தலில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

கொல்கத்தாவின் சோர்பகன் துர்கா பூஜை பந்தலில் ஏற்பட்ட நெரிசலில் 19 பேர் உயிரிழந்தனர், 25க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களைச் சந்திக்க மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரி ஆகியோர் கொல்கத்தாவில் உள்ள அப்பல்லோ மருத்துவமனைக்குச் சென்றனர்.

அங்கு பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து நலம் விசாரித்தனர். பாதிக்கப்பட்டவர்களின் உடல் நிலை குறித்து மருத்துவர்களும் விளக்கம் அளித்தனர். இதையடுத்து, இது தொடர்பாக அமித் ஷா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "கொல்கத்தாவில் உள்ள சர்பாகன் துர்கா பூஜை பந்தலில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த பக்தர்களை மருத்துவமனையில் நேரில் சந்தித்து, அவர்களின் உடல்நலம் குறித்து விசாரித்தேன்.

இந்த இக்கட்டான சூழலில், காயமடைந்த ஒவ்வொரு நபருக்கும், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் மேற்கு வங்க அரசு உறுதுணையாக நிற்கும். காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய துர்கா தேவியிடம் பிரார்த்திக்கிறேன்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அமித் ஷா வெளியிட்ட எக்ஸ் பதிவில், "சோர்பகன் சர்வஜனீன் துர்கா பூஜை பந்தலில் ஏற்பட்ட நெரிசலில் பலர் உயிரிழந்தனர் என்ற மிகவும் துயரமான செய்தியை அறிந்தேன். இது குறித்து முதல்வர் சுவேந்து அதிகாரியிடம் பேசினேன். இந்தத் துயர விபத்தில் உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்; அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காயமடைந்தவர்களுக்குச் சிறந்த மருத்துவ சிகிச்சை கிடைக்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது. அவர்களை நேரில் சந்திப்பதற்காக, மேற்கு வங்கத்தில் நான் கலந்துகொள்ளவிருந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒத்திவைக்கிறேன். காயமடைந்தவர்கள் அனைவரும் விரைவில் குணமடைய அன்னை துர்கையை வேண்டிக்கொள்கிறேன்" எனத் தெரிவித்திருந்தார்.

சோர்பகன் துர்கா பூஜை பந்தலில் ஏற்பட்ட கடும் கூட்ட நெரிசலால், 19 பேர் உயிரிழந்ததை தொடர்ந்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க, கொல்கத்தா காவல்துறை அக்டோபர் 18 முதல் அக்டோபர் 20 வரை மூன்று நாட்களுக்கு நகரின் பல பகுதிகளுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நெரிசல் சம்பவம் தொடர்பாக கொல்கத்தா காவல்துறை இதுவரை ஏழு நபர்களைக் கைது செய்துள்ளது. பூஜை கமிட்டியின் செயலாளர் ராஜ் குமார் சேவ்டா என்கிற ராஜா (48), துணைத் தலைவர் சாந்தனு துபே (55) மற்றும் பந்தல் பணிகளில் ஈடுபட்ட பிப்லாப் முகர்ஜி என்கிற ஜாய் (48), விஐபி அனுமதிச் சீட்டுகளைச் சரிபார்க்கும் பணியிலும் இருந்த கௌசிக் சாஹா (53), கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்ட பின்டு டே (51), மற்றும் தனியார் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான சுமன் சக்ரவர்த்தி (30) மற்றும் ராஜேஷ் பால் (29) ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# "பழனிசாமியின் விமர்சனங்களுக்கு பதில் கூறுவது நேர விரயம்" அமைச்சர் செங்கோட்டையன் பேச்சு



கோவை: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக முதல்வரின் ஒப்புதலுடன், தமிழகத்தில் 1 லட்சத்து 4 ஆயிரம் பேர் களத்தில் தயார் நிலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தமிழக வருவாய்த்துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் செங்கோட்டையன், "தமிழகத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்வதற்கு, முதல்வரின் ஒப்புதலோடு தமிழகத்தில் 1 லட்சத்து 4 ஆயிரம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதில் அரசு அலுவலர்கள் மட்டுமன்றி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், களப்பணியாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று மழைநீர் தேங்கும் பகுதிகளைக் கண்டறிந்து மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 250 படகுகளும், மீனவர்களும் தயார் நிலையில் உள்ளனர். அதிமுகவிலிருந்து 15 பேர் வருவார்கள் என்றுதான் கூறினேனே தவிர, 15 அதிமுக எம்.எல்.ஏ.க்கள் வருவார்கள் என்று எந்த இடத்திலும் நான் குறிப்பிடவில்லை.

மக்களுக்கு விரைந்து சென்று பணியாற்ற வேண்டிய இந்த முக்கிய நேரத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியின் விமர்சனங்களுக்கெல்லாம் பதில் கூறி, நேரத்தை விரயம் செய்ய தேவையில்லை. அதிமுகவில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்ற கருத்து, அதிமுகவின் இருபிரிவுகளிடமும் கேட்க வேண்டிய கேள்வியே தவிர, என்னிடம் கேட்க வேண்டியதல்ல. அதிமுகவில் இருந்து என்னை பழனிசாமி நீக்கியது, ஒரு வகையில் எனக்கு செய்த நன்மையே. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஈரோட்டிலிருந்து பல்கேரியாவுக்கு பனை வெல்லத்தூள் ஏற்றுமதி: மத்திய அரசு நடவடிக்கை



தமிழ்நாட்டின் பாரம்பரிய பனை தயாரிப்புகளுக்கு சர்வதேச அளவில் பெரும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் இருந்து ஐரோப்பிய நாடான பல்கேரியாவுக்கு முதன்முறையாக பனை வெல்லத்தூள் ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது.

இதுகுறித்து மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும், வேளாண் மற்றும் பதனப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவின் பாரம்பரிய பனை சார்ந்த தயாரிப்புகளை உலக நாடுகளின் சந்தைகளுக்கு கொண்டு செல்ல மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் இருந்து பல்கேரியா நாட்டின் வார்னா நகருக்கு 1.755 மெட்ரிக் டன் எடையுள்ள இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட பனை வெல்லத்தூள் (பனை மலர் தேனிலிருந்து தயாரிக்கப்பட்டது) முதன்முறையாக நேற்று வெற்றிகரமாக ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஈரோடு பகுதியில் சுமார் 137 ஏக்கர் பரப்பளவில் இந்த பனை மரங்கள் இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த இயற்கை சாகுபடி திட்டம், தமிழ்நாட்டின் பாரம்பரிய பனை தயாரிப்புகளுக்கான சர்வதேச சந்தை வாய்ப்புகள் அதிகரித்துள்ளது.

உள்நாட்டுச் சந்தையோடு ஒப்பிடும்போது, இந்த வெளிநாட்டு ஏற்றுமதி மூலம் விவசாயிகளுக்கு 15 முதல் 22 சதவீதம் வரையிலும், உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு 17 சதவீதம் வரையிலும் கூடுதல் வருவாய் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி நாட்டின் இயற்கை விவசாயிகளிடையே பெரும் மகிழ்ச்சியையும், புதிய நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# Violent protests, town hall torched, looting and 1,800 arrests: What's happening in France



Violent protests broke out across France, resulting in hundreds of arrests, looting, and destruction in several cities during demonstrations reportedly called against high inflation and the cost of living.

France on Sunday woke up to devastated streets after clashes between police and protesters amid marches against rising costs of living, news agency AFP reported. This unrest followed weeks of student protests over several alleged issues, including school conditions and teacher shortages.

Saturday's de nstrations in France were reportedly called by the Yellow Vest movement to protest high inflation and the rising cost of living. "We're sick of slaving away for poverty wages while our rents keep going up," teacher Regine Monfroid told AFP. But there were other issues as well.

The unrest and major damage: Paris and other cities, including Bordeaux, Strasbourg, Nice, and Marseille, had many shops attacked.

The city of Limoges lost its 19th-century town hall to a fire; the local prefect, Maurice Barate, told LCI television that "a wild horde" had set it, the report added. In Paris, tourists were seen on Saturday running with suitcases along streets filled with tear gas and demonstrators, it said.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.